ஸ்ரீ:


ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# 7. பெரிய திருவேங்கட ஸ்வாமி

## தனியன்

ஸ்ரீமத் யதீந்த்$_3$ர ஷட$_2$ஜித்சரணாரவிந்த$_3$
ப்ரேமாம்புராஸி வரயோகி$_3$ பத$_3$ாப்$_3$ஜப்$_4$ருங்கே |
வாநாத்$_3$ரி யோகி$_3$நி ஸத$_3$ா ப்ரணயப்ரவீணம்
ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி நித்யம் ||

## வாழி திருநாமம்

செஞ்சொல் மறைத் தமிழ் மாறன் திறம் உரைப்போன் வாழியே
ஸ்ரீபெரும்பூதூர் முனி தாள் சிந்தை செய்வோன் வாழியே
அஞ்சொல் மணவாள முனி அருளுடையோன் வாழியே
அரங்க நகர் அப்பன் இணையடி பணிவோன் வாழியே
விஞ்சை முனி தாள் பணியும் வேதியர் கோன் வாழியே
வேதாந்தப் பொருள் அனைத்தும் விளக்குவித்தோன் வாழியே
மஞ்சுலவு மங்கை நகர் வந்துதித்தோன் வாழியே
வானமாமலை முனிவன் மலரடிகள் வாழியே

ஆவணியில் பரணி தனில் அவதரித்தோன் வாழியே
ஆழ்வார்கள் அனைவர் கலை ஆய்ந்துரைப்போன் வாழியே
பூவுலகில் வரமுனி தாள் போற்றுமவன் வாழியே
பூதூரான் அடியிணையைப் புகழுமவன் வாழியே
தாவளமா விஞ்சை முனி தாள் தொழுவோன் வாழியே
தத்துவமாம் எட்டெழுத்தைத் தந்தருள்வோன் வாழியே
மேவி வரமங்கை நகர் விளங்குமவன் வாழியே
வேங்கட மாமுனிவன் இந்த மேதினியில் வாழியே

## சீர்

வாழி வரமங்கை மாமுனிவன் வைபவங்கள்
வாழியவன் கமல மலர்த் தாள்கள் - வாழியே
விஞ்சை வரமுனிவன் மெய்யருளால் மாறன்
செஞ்சொல் மறை தேர்ந்துரைக்கும் சீர்

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்
http://www.acharya.org